ශ්‍රී ලංකා දුම්රිය සේවය
SRI LANKA RAILWAYS
இலங்கை புகையிரத சேவைகள்

**“தித்வா” சூறாவளியினால் சேதமடைந்த அம்பேவல - நானுஓயா இடையிலான வீதிப் பகுதி புனரமைக்கப்பட்டு, பதுளையிலிருந்து நானுஓயா வரையான புகையிரத சேவை ஆரம்பம்.**

“தித்வா” சூறாவளி காரணமாக, அம்பேவல - நானுஓயா இடையிலான புகையிரத பாதையின் 134 ஆவது மைல் 78 சங்கிலிப் பகுதியில், புகையிரத பாதை 65 அடி ஆழத்திற்கும், 100 அடி அகலத்திற்கும், 120 அடி நீளத்திற்கும் அடித்துச் செல்லப்பட்டிருந்தது. மலைச்சரிவு நிலைமை, இப்பகுதியைச் சென்றடைவதற்கான மாற்று விநியோகப் பாதைகள் இல்லாமை, நிலவும் மோசமான காலநிலை மற்றும் தேவையான இயந்திரங்கள், மூலப்பொருட்களை புகையிரத மூலமே கொண்டு செல்ல வேண்டியிருந்தமை போன்ற சவால்களுக்கு மத்தியில், அனைத்து புனரமைப்புப் பணிகளும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்துடன் (NBRO) இணைந்து, புகையிரத திணைக்களத்தின் வீதி மற்றும் தொழில்துறை உப-திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு, தற்போது புகையிரத பாதை போக்குவரத்திற்கு உகந்த நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதற்கமைய, இதுவரையில் பதுளையிலிருந்து அம்பேவல வரை மாத்திரம் இயக்கப்பட்ட புகையிரத சேவைகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முக்கிய புகையிரத நிலையங்களில் ஒன்றான நானுஓயா புகையிரத நிலையம் வரை, 2026/06/20 ஆம் திகதி முதல் பின்வருமாறு இயக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**[1] 1005 / 1006 விசேட புகையிரதம்**

| **நானுஓயா / பதுளை (1005) – தினமும் இயக்கப்படும்** | | **பதுளை / நானுஓயா (1006) – தினமும் இயக்கப்படும்** | |
|---|---|---|---|
| **புகையிரத நிலையம்** | **புறப்படும் நேரம்** | **புகையிரத நிலையம்** | **புறப்படும் நேரம்** |
| நானுஓயா | மு.ப.09.00 | பதுளை | பி.ப.03.00 |
| அம்பேவெல | மு.ப.09.30 | தெமோதர | பி.ப.03.37 |
| பட்டிப்பொல | மு.ப.09.38 | எல்ல | பி.ப.03.52 |
| ஓஹிய | மு.ப.09.53 | பண்டாரவளை | பி.ப.04.23 |
| இதல்கஸ்ஹின்ன | மு.ப.10.12 | தியத்தலாவ | பி.ப.04.37 |
| ஹப்புத்தல | மு.ப.10.28 | ஹப்புத்தல | பி.ப.04.49 |
| தியத்தலாவ | மு.ப.10.40 | இதல்கஸ்ஹின்ன | பி.ப.05.05 |
| பண்டாரவளை | மு.ப.10.56 | ஓஹிய | பி.ப.05.24 |
| எல்ல | மு.ப.11.27 | பட்டிப்பொல | பி.ப.05.39 |
| தெமோதர | மு.ப.11.41 | அம்பேவெல | பி.ப.05.47 |
| பதுளை | பி.ப.12.16 | நானுஓயா | பி.ப.06.06 |

[2] 1015/1016 விசேட புகையிரதம்

| நானுஓயா / பதுளை (1015) – புதன்கிழமை இயக்கப்படாது. | | பதுளை / நானுஓயா (1016) – புதன்கிழமை இயக்கப்படாது. | |
|---|---|---|---|
| புகையிரத நிலையம் | புறப்படும் நேரம் | புகையிரத நிலையம் | புறப்படும் நேரம் |
| நானுஓயா | பி.ப.02.30 | பதுளை | மு.ப.09.00 |
| அம்பேவெல | பி.ப.03.00 | தெமோதர | மு.ப.09.37 |
| பட்டிப்பொல | பி.ப.03.08 | எல்ல | மு.ப.09.52 |
| ஒஹிய | பி.ப.03.23 | பண்டாரவளை | மு.ப.10.23 |
| இதல்கஸ்ஹின்ன | பி.ப.03.42 | தியத்தலாவ | மு.ப.10.37 |
| ஹப்புத்தலே | பி.ப.03.58 | ஹப்புத்தல | மு.ப.10.49 |
| தியத்தலாவ | பி.ப.04.10 | இதல்கஸ்ஹின்ன | மு.ப.11.05 |
| பண்டாரவளை | பி.ப.04.26 | ஒஹிய | மு.ப.11.24 |
| எல்ல | பி.ப.04.57 | பட்டிப்பொல | மு.ப.11.39 |
| தெமோதர | பி.ப.05.11 | அம்பேவெல | மு.ப.11.47 |
| பதுளை | பி.ப.05.46 | நானுஓயா | பி.ப.12.16 |

[3] 1043/1044 "எல்ல ODYSSEY" விசேட புகையிரதம்

| நானுஓயா / பதுளை (1043) – புதன்கிழமை மட்டும் இயக்கப்படும் | | பதுளை / நானுஓயா (1044) – புதன்கிழமை மட்டும் இயக்கப்படும் | |
|---|---|---|---|
| புகையிரத நிலையம் | புறப்படும் நேரம் | புகையிரத நிலையம் | புறப்படும் நேரம் |
| நானுஓயா | பி.ப.01.00 | பதுளை | மு.ப.07.45 |
| அம்பேவெல | பி.ப.01.32 | தெமோதர | மு.ப.08.19 |
| பட்டிப்பொல | பி.ப.01.42 | எல்ல | மு.ப.08.43 |
| ஒஹிய | பி.ப.01.56 | பண்டாரவளை | மு.ப.09.11 |
| இதல்கஸ்ஹின்ன | பி.ப.02.14 | தியத்தலாவ | மு.ப.09.27 |
| ஹப்புத்தல | பி.ப.02.29 | ஹப்புத்தல | மு.ப.09.39 |
| தியத்தலாவ | பி.ப.02.40 | இதல்கஸ்ஹின்ன | மு.ப.10.15 |
| பண்டாரவளை | பி.ப.02.55 | ஒஹிய | மு.ப.10.33 |
| எல்ல | பி.ப.03.21 | பட்டிப்பொல | மு.ப.10.47 |
| தெமோதர | பி.ப.03.39 | அம்பேவெல | மு.ப.11.00 |
| பதுளை | பி.ப.04.12 | நானுஓயா | மு.ப.11.29 |

மேற்குறிப்பிட்ட அனைத்து புகையிரதங்களிலும், முதல்தர (குளிரூட்டப்பட்ட) மற்றும் இரண்டாம் தர ஆசனங்களை முன்பதிவு செய்யும் வசதியைக் கொண்ட பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த புகையிரதங்களுக்கான ஆசனங்களை **https://seatreservation.railway.gov.lk** என்ற இணையத்தளம் ஊடாக அல்லது ஆசன முன்பதிவு வசதி கொண்ட ஏதேனும் ஒரு புகையிரத நிலையத்திற்குச் சென்று முன்பதிவு செய்துகொள்ள முடியும்.

அத்துடன், பயணத்தின் ஆரம்ப அல்லது முடிவு நிலையமாக "அம்பேவல புகையிரத நிலையம்" எனக் குறிப்பிட்டு ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட முன்பதிவு செய்யப்பட்ட ஆசனப் பயணச்சீட்டுகளைப் பயன்படுத்தி, நானுஓயாவிலிருந்து பயணத்தை ஆரம்பிக்க அல்லது நானுஓயா புகையிரத நிலையத்தில் பயணத்தை நிறைவு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.